நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 7
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
ஜூலை - 2020

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையன்	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு.வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. **இதழ் மணம்** - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. **சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** 7
   - முதுமுனைவர் இரா. இளங்குமரன்

3. **தமிழிலும் இந்தோ - ஆரிய மொழிகளிலும் குறிப்பு எனும் உத்தி** - பேராசிரியர் ம. மருதநாயகம் 9

4. **சொற்களின் தோற்றமும், வளர்ச்சியும், மறைவும்**
   - பேராசிரியர் பழனி. அரங்கசாமி 27

5. **சங்கச் செய்திகள்** 42

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

- பேராசிரியர் இரா.சதாசிவம்

பேராசிரியர் இளங்குமரனார் குறுந்தொகை 40-ஆம் பாடலை விளக்கும் முறை அப்பெருமகனாருடைய ஆழ்ந்து அகன்ற கல்விப்புலத்தின் வெளிப்பாடாகும்.

குறிப்பாக இரண்டு நுட்பமான செய்தி திறனாய்வுக்குரியது. செம்புலம் என்பதை விளக்கியுள்ளது அவருடைய பட்டறிவை எடுத்துரைப்பதாகும். தரிசுநிலத்தில் பெய்த நீர் நில்லாது ஓடிவிடும். செப்பம் செய்து பண்பட்ட உழுத நிலத்தில் பெய்த நீரை நிலம் உள்ளே இழுத்துக் கொண்டு பயிருக்குப் பயன்படுத்தும். நீர் போல, அன்பு வாழ்க்கையை மனையை மாட்சியுடையதாக்கும். அன்பு இல்லாத இல்வாழ்க்கை வீணாகும் என்னும் நுட்பம் பொதிந்திருப்பதைச் செய்யுள் எடுத்துரைப்பதை குறிப்புப் பொருளாகச் செம்புலப் பெயல் நீர் என்னும் தொடர் விளக்குவதால் அப்புலவர் செம்புலப்பெயல் நீரார் எனப்பெயரிட்டு மகிழ்ந்திருப்பதை இளங்குமரனார் விளக்கம் நமக்களிக்கும் புதிய உண்மையாகும். இதனை வேறு உரையாசிரியர் யாரும் குறிப்பிடாததும் உற்று நோக்கத்தக்கதாகும். செம்புலப் பெயல் நீர் என்னும் உவமை உள்ளுறையாகக் குறிப்புப் பொருளை மனம் அசைபோட உபகாரப்படுவது கவிஞருடைய சிந்தனை கற்பவர் உள்ளத்தில் அழியா நினைவைத் தந்து இன்புறுத்தும் செய்தி; பலமுறை நினைத்து வாழ்க்கையைச் செழிப்பூட்டும்; அதனால் இப்பாடல் உலகம் தழுவிய பாடலாக மேலைநாடுகளிலும் போற்றப்பட்டு வாழ்க்கையைக் கற்றுத்தரும் செய்தியும் உணர்தற்குரிய உண்மையாகும்.

இரண்டாவதாகப் பேராசிரியர் இளங்குமரனார், பால் என்பது ஊழ்; இயற்கை இயங்கியல் எனக்குறிப்பிட்டிருப்பது அவருடைய அறிவின் வெளிப்பாடாகும். இயற்கை இயங்கியல் என்பது அண்டவெளியில் இயங்கும் பலகோடி விண்மீன்கள் தம்மியல்பில் ஒருவரம்பில் ஒழுங்கில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனைக் கிரேக்க மொழியில் (Cosmos) என்பர்; இதனை இயற்கையின் ஒழுங்கியல், இயங்கியல் என அறிஞர் உலகம் ஆராய்கிறது. இயற்கை இயங்கியல் ஒழுங்கில் இயங்குவதுபோல மக்கள் மனமும் ஒழுங்கில் இயங்கினால் வாழ்க்கை சிறக்கும்.

மக்கள் சமுதாயம் இவ்ஒழுங்கு தவறி மனச்சிதைவுடைய வழிவழியாகத் திசைதவறிப் பயணிக்கிறது. அதனால் மக்கள் வாழ்க்கை அற்பமாகச் சிதைவுறுகிறது. இயற்கை ஒழுங்கிற்கும் மக்கள் சமுதாயத்தின் ஒழுங்கின்மைக்கும் முடிச்சுப் போடுவது, அறியாமையின் விளைவு; இதனை ஊழ்வினை என்றும் சடங்கு நம்பிக்கை என்னும் பெருங்கூட்டமாக சமயம்சார்ந்த சிந்தனை வளர்த்தெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொல்காப்பியர் காலச் சிந்தனையாகிய பால் ஊழ், இயற்கை இயங்கியலுடன் பொருத்தி சமய ஊடகம் தங்கள் வாழ்க்கை முதலாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதும் பேராசிரியர் இளங்குமரனார் விளக்கம் அறிவுறுத்துகிறது. இயற்கை ஒழுங்கியல் ஊழ்வேறு, சமயம் சார்ந்த கருமப்பயன், ஊழ்வினை வேறு என்பதை உணர்தல் நலம்.

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் எழுதிய "தமிழிலும் இந்தோ - ஆரிய மொழிகளிலும் 'குறிப்பு எனும் உத்தி" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. கவிஞனின் படைப்பு கலைநயம் சார்ந்த வாழ்க்கையை சொற்களில் படைத்து வாழ்க்கையையும் இலக்கியத்தையும் சுவை உடையதாகச் செய்கிறது. வழிவழிவந்த பண்பட்ட கலைநயம் உடையதாக மாற்றம் பெறுகிறது. அவை சங்க இலக்கியக் கவிதைகளில் களவு, கற்பு எனக்காதல் காட்சிகளாக உணர்ச்சி உரிப்பொருளாக குறிப்பாக உணர்த்தப்படுகிறது. கவிஞன் தன் சொல்லாற்றலால் தான் வாழ்கின்ற சூழலில் காணும் இயற்கைப் பின்னணியில் கருப்பொருளாகவும் முதற்பொருளாகவும் உள்ளவற்றை உபகாரப்படுத்தி குறிப்பாக நம் சிந்தனைக்கு விட்டுச் செல்கிறான். சங்க இலக்கியக் கவிதை உலகம் முழுவதையும் உள்ளடக்கியது. பிரபஞ்ச வளர்ச்சி பெற்றுள்ளதை ஆசிரியர் சுட்டுவது கவிதையின் உள்ளார்ந்த பொருளைக் காட்டுகிறது.

காதலர் உள்ளத்தில் தோன்றும் அன்பும் இனிமையும் ஐந்திணைப் பொருளாகக் குறிப்புப் பொருளாகப் படிப்பவரின் கற்பனைக்கும் நினைந்து நினைந்து அசைபோடுவதற்கும் சங்க இலக்கியக் கவிதைகள் சுவை உணர்வைப் பெருக்குகின்றன. கவிஞன் படிப்பவன் உள்ளத்தை ஈர்த்துக் கவிதை இன்பத்தில் திளைக்க வைக்கும் உத்தியை ரசம், தொனி என வடநூலார் கூறுவர். அத்தகைய குறிப்புப் பொருள் சங்க இலக்கியத்தில் உள்ளதையும் அத்தகைய ரசம், தொனி வடமொழி இலக்கியத்தில் இருப்பதற்குரிய சான்றுகள் இல்லை என்பதையும் அறிஞர் ஜார்ஜ் ஹார்ட் விளக்கும் உண்மையைப் பேராசிரியர் இக்கட்டுரையில் தக்க சான்றுகளுடன்

எடுத்துரைக்கின்றார். ரசம் இலக்கியச்சுவை; பாவம் கற்பவன் உள்ளத்தில் தோன்றும் சுவை உணர்வு; தொனி குறிப்புப் பொருள்; ஆசிரியன் கற்பவன் சிந்தனைக்கு விட்டுச்செல்லும் நீங்கா இன்பம்.

பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள பெர்க்கிலி பல்கலைக்கழகத்தில் மானிடவியல் ஆராய்ச்சித்துறையில் பணியாற்றுகிறார். அவர் வடமொழி, கிரேக்கம், லத்தீன், ஈபுரு, தமிழ் ஆகிய செவ்விலக்கிய மொழிகளில் புலமை வாய்ந்தவர். அப்பெரியார் மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்றவர்; அவருடைய துணைவியார் தமிழர்; தமிழ் இலக்கியம் குறித்துப் பல்வேறு கருத்தரங்குகளில் கட்டுரை படைத்துள்ளார்; புறநானூறு முழுவதையும் ஆங்கிலத்தில் ஆய்வுரையுடன் வெளியிட்டுள்ளார். மராத்தி சடசை குறித்தும் ஆய்வுரை வழங்கியுள்ளார்.

மேலைநாட்டு அறிஞர் ஜார்ஜ்ஹார்ட் தமிழ் இலக்கியப் படைப்பை ஆழ்ந்த புலமையுடன் திறனாய்வு செய்திருப்பதை பேராசிரியர் ப. மருதநாயகம் தமிழ் உலகுக்கு எடுத்துரைப்பது தமிழ் மாணவர்கள் மேலும் ஆராய்வதற்கும் மேலும் கற்றுப் பயன் பெறுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

பேராசிரியர் பழனி. அரங்கசாமி தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் ஆற்றல்மிக்க அறிஞர். மாறிவரும் அறிவியல், பொறியியல், மருத்துவம், கட்டடக்கலை, தொழிநுட்பம் போன்ற துறைகளில் புதிய கண்டுபிடிப்புக்களின் தாக்கத்தால் புதிய சொற்கள் மேலை மொழிகளில் பெருகிவருகின்றன. அவற்றைத் தமிழில் புத்தாக்கம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் ஒரு அமைப்பை அரசு ஏற்படுத்த வேண்டிய இன்றியமையாத் தேவை ஏற்பட்டுள்ளது. கல்வியாளர்கள், பல்கலைக்கழகங்கள் மேலைநாடுகளில் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் பிரஞ்சு அகாதமி போன்று நிரந்தரமான குழு ஒன்றை ஏற்படுத்தி மொழி அகராதியைக் காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். பேராசிரியர் பழனி அரங்கசாமியின் இக்கருத்து அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும். இது குறித்த மாத இதழ் ஒன்றும் தமிழில் வெளிவருதல் அவசியம், அரசு மொழி வளர்ச்சியில் கவனம் செலுத்தி இதுபோன்ற ஆக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பேராசிரியர் பழனி அரங்கசாமியின் இக்கருத்து செயல்பாட்டிற்கு வருவது இன்றையத்தேவை.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் இரா.இளங்குமரன்

14. செம்புலப் பெயல் நீரார்

பலரும் அறிந்த பாடல்; பாடியவர் பெயர் தெரியாப் பாடல்; தமிழ்ப்பற்றாளர் திருமண அழைப்பிதழ்களில் பெரிதும் இடம் பெறும் பாடல்; உலகப்பரப்பில் பெரிய பகுதியை ஆண்ட ஆங்கிலேயர் தம் இங்கிலாந்து, தொடர்வண்டி நிலையத்தில் ஆங்கிலப் பெயர்ப்புடன் விளங்கும் புகழ்மிகு பாடல்:

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந் தனவே

(குறுந்தொகை, 40)

என்பது அப்பாடல்.

பொருள்: என்தாயும் உன்தாயும் யார் யார்? என் தந்தையும் உன் தந்தையும் யார் யார்? எவ்வகையால் உறவுடையார்?

யானும் நீயும் எவ்வாறு அறிவோம்! இவையெல்லாம் ஒன்றும் இல்லையாகவும் பண்பட்ட நிலத்துப் பெய்த மழை நீரும் அந்நிலமும் இரண்டறக் கலந்துவிட்டது போல நம் அன்புடைய நெஞ்சங்கள் தம்முள் தாமே கலந்து ஒன்றாகிவிட்டனவே. செம்புலம் செவ்வியப் பண்படுத்தி அமைந்த நிலம். செவல் நிலம் என்றால் மழைநீர் உள்வாங்காமல் ஓடிப்போகும். பண்பட்ட நிலத்தில் பெய்தால் நீரை உள்வாங்கும். நெடிது ஈரம் நிற்கும்; பெரும் பயன் உண்டாக்கும்.

நிலத்தொடு நீரியைந் தன்னார் (1323)

என்பது திருக்குறள்.

"இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின்னர், பிரிவர் எனக்கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது" என்பது இதன் கூற்றுவகை.

அரும்பொருள்: யாய்-என்தாய்; ஞாய்-உன்தாய்; எந்தை-எம்தந்தை; நுந்தை-நும்தந்தை; கேளிர்- உறவினர்.

ஆசிரியர் தொல்காப்பியர்,

ஒன்றே வேறே என்றிரு பால் வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப (1039)

என்பதற்கு அமைந்த அருமை எடுத்துக்காட்டு ஈதாம்.

ஒன்று - இருவரையும் ஒன்றுபடுத்தும் இயற்கை.

வேறு - இருவரையும் ஒன்றாமல் வேறுபடுத்தும் இயற்கை.

பால் என்பது ஊழ்; இயற்கை இயங்கியல். 'ஒத்த' என்பது **பத்து** என்பார்.

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (1219)

என்பது அது.

இப்பெருமைப்பத்து ஒழிந்து, சிறுமைப்பத்து பலவாகப் புகுந்தது; பண்பாட்டுக் கேடாம்.

தமிழிலும் இந்தோ – ஆரிய மொழிகளிலும் குறிப்பு எனும் உத்தி

பேரா. ப.மருதநாயகம்,
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600 113.
கைபேசி: 94427 87727

உயர்ந்த இலக்கியங்கள் ஐம்புலன்களையும், அறிவையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் ஒருங்கே தாக்குவதில் வெற்றிபெற வேண்டுமென்பார் மேலைக்கவிஞரும், கல்வியாளரும், திறனாய்வாளரும் ஆகிய கோலரிட்சு. சங்கச் சான்றோர் பாடல்கள் பல நூறாண்டுகளுக்குப் பிறகும் இதனைச் செய்ய முடிவதற்கு அவை கையாளும் ஒரு சில உத்திகளே காரணமாகும். மேலையோரால் குறிப்பு (Suggestion) என்று அழைக்கப்பெறுவது அவற்றுள் ஒன்றாகும். இதனைப் பழந்தமிழ்க் கவிதைகளும், பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற இந்தோ – ஆரிய மொழி இலக்கியங்களும் எவ்வாறு கையாள்கின்றன எனும் ஒப்பீட்டாய்வை மேற்கொண்ட ஜார்ஜ் ஹார்ட் (George Hart) என்பார், தமது முடிவுகளை 'The Technique of Suggestion in Tamil and Indo – Aryan' எனும் நீண்ட கட்டுரையில் கற்பார் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தெரிவிப்பார். தமது ஆய்வுக்குத் தமிழ் எட்டுத்தொகை நூல்களோடு வால்மீகி இராமாயணம், வியாசபாரதம், அசுவகோசரின் புத்தசரிதம், சத்தசாயி ஆகியவற்றையும் எடுத்துக்கொண்டு, அப்பன்மொழி அறிஞர் பல சான்றுகள் தந்து, குறிப்பால் பொருள் உணர்த்துவதில் சங்கப்புலவர்களுக்கு ஈடானவர் உலகில் எம்மொழியிலும் இல்லை என்பதை ஐயத்திற்கிடமின்றி நிறுவுவார். அன்னார் சுட்டும் சான்றுகளையும் சுருங்கக் கூறும் கருத்துகளையும் விரித்து நோக்குவோமானால், நாம் அடையும் முருகியல் இன்பம் அளவற்றது. புறநானூற்றின் 86-ஆம் பாடல் காவற்பெண்டு எனும் பெண்பாற்புலவரால் எழுதப்பட்டது.

சிற்றில் நற்றூண்பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி; என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஓரும்

புலிசேர்ந்து போகிய கல் அளைபோல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே.

இது வாகைத்திணையில் ஏறாண் முல்லைத் துறையைச் சார்ந்தது என்பர். ஆனால், பலவகைச் சூழல்களுக்கும் இடம் தரும் கூற்று, வீரன் ஒருவனின் தாய்க்குத் தரப்பட்டுள்ளது. யார் யாரிடம் எச்சூழலில் சொல்லப்பட்டது என்ற விளக்கம் பாடலில் இடம்பெறவில்லை. ஆனால் ஒவ்வோரடியாகப் பாடலைப் படித்து முடித்தவுடன், 'உன்மகன் எங்குள்ளான்?' என்று யாரோ ஒருவர் கேட்ட கேள்விக்கு வீரனொருவனின் தாய் பெருமிதவுணர்வோடு, "அவனைப் பெற்ற வயிறு இங்குள்ளது. அது புலியிருந்து போகிய கல்லாலான குகையைப் போன்றது. அவன் போர்க்களத்தைத்தவிர வேறு எங்கே போயிருக்கப்போகிறான்? போரை விட்டால் அவனுக்கு வேறு தொழில் ஏது?" என்று விடை பகர்கின்றாள். அம் மாவீரனும் அவன் தாயும் வாழும் இல்லம் சிறியது. வினாவைத் தொடுப்பவர் இல்லத்து அழகிய தூணைப்பற்றி நின்று கேட்பதால் அத்தாயிடம் அன்பு கொண்ட அண்டைவீட்டுப் பெண்ணாக அவள் இருக்க வேண்டும்; அவ்வீரனைப் பார்க்க வந்த அவன்பால் காதல் கொண்ட இளம் பெண்ணாகக் கூட இருக்கலாம்! ஒரு சில அடிகளிலேயே ஒரு நாடகக் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டுவதில் புலவர் வெற்றி பெறுகிறார்.

பூங்கணுத்திரையார் என்னும் புலவர் பாடிய புறநானூற்றின் 277-ஆம் பாடல் தும்பைத் திணையில் உவகைக் கலுழ்ச்சித் துறையைச் சேர்ந்தது என்பார்.

மீன் உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்
நோன் கழை துயல் வரும் வெதிரத்து
வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

இதனைப் புலவர் கூற்றாகவோ, கண்டோர் கூற்றாகவோ கொள்ளலாம். கொக்கின் சிறகு போன்று வெண்மையான நரைத்த கூந்தலை உடைய முதியவள் ஒருத்தி அவளது இளம் மைந்தன் போர்க்களத்தே யானையைக் கொன்று மாண்டான் என்னும்

செய்திகேட்டு அவனைப் பெற்ற பொழுதினும் பேருவகை கொண்டாள்; அவள் விட்ட ஆனந்தக் கண்ணீர் மூங்கில் மரங்களிலிருந்து கொட்டும் மழைநீர்த்துளிகளினும் பலவாம். இப்புறநானூற்றுப் பாடல்களில் உள்ள ஒவ்வொரு படிமமும் பல குறிப்புப் பொருள்களை உள்ளடக்கியுள்ளதென்றும் மேலெழுந்த வாரியான பொருளைவிட நம் சிந்தனைக்கு விடப்பட்டுள்ள ஆழ்ந்த பொருள் மிகுதியானதென்றும் ஜார்ஜ் ஹார்ட் பாராட்டுவார்.

"Each image raises many suggestions; there is more in each poem than the analysis suggests".

ஐங்குறுநூற்றின் 57-ஆம் பாடல், 'தோழிகூற்றுப் பத்து' என்னும் பகுதியில் வருவது.

பகலில் தோன்றும் பல்கதிர்த்தீயின்
ஆம்பல் அம் செறுவின் தேனூர் அன்ன
இவள் நலம் புலம்பப் பிரிய
அனை நலம் உடையளோ மகிழ்ந நின் பெண்டே.

தலைவியைப் பிரிந்து வேறொரு பெண்ணோடு வாழும் தலைவனைத் தோழி கேட்கிறாள்: கதிரவனைப் போன்று ஒளி வீசும் செவ்வல்லி. ஆம்பல் மலர்கள் நிறைந்த வயல்களைக் கொண்ட தேனூரை ஒத்த அழகினை உடையவள் தலைவி. நீ பிரிந்து சென்றதால் அவள் துன்புற்றுத் தவிக்கிறாள். உன்னோடு இப்போது இருப்பவள் தலைவிக்கு நிகரான அழகு உடையவளோ?

தலைவியின் அழகைச் சொல்ல, ஊரின் அழகு எடுத்துரைக்கப்படுகிறது. தலைவன் செய்த கொடுமை, அறமற்ற செயல் பெரிதுபடுத்திப் பேசப் பெறவில்லை. அவனது பண்பற்ற நடத்தை வெளிப்படையாகக் கண்டிக்கப்படவில்லை. ஆயினும் இறுதி அடி அவலச் சுவையின் உச்சத்தை அடைகிறது. தலைவனது அறிவின்மையை இதைவிடப் பண்போடு எடுத்துச் சொல்லுதல் இயலாது.

ஐங்குறுநூற்றின் 186-ஆம் பாடல், 'நெய்தல் பத்து' என்னும் தலைப்பினில் வருவது.

நாரை நல் இனம் கடுப்ப மகளிர்
நீர்வார் கூந்தல் உளரும் துறைவ
பொங்கு கழி நெய்தல் உறைப்ப இத்துறைப்
பல்கால் வரூஉம் தேரெனச்
செல்லாதீமோ என்றனள் யாயே.

இப்பாடலும் தவறு செய்யும் தலைவனை இடித்துரைக்கும் தலைவியின் கூற்று. இத்தலைவன் களவுமணத்தை நீட்டித்துச் செல்லும் எண்ணத்தில் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாது காலம் தள்ளுபவன் போலும்!

"நாரைகளின் கூட்டத்தையொத்த மகளிர், நனைந்த கூந்தலை உலர்த்தும் துறைக்குச் சொந்தமானவனே! எங்களுடைய தாய் எங்களுக்குச் சொன்ன அறிவுரை என்ன தெரியுமா? இத்துறையில் பொங்கி வழியும் நீரில் மலர்ந்துள்ள நெய்தல் மலர்களைச் சிதைத்துக் கொண்டு ஒருதேர் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது".

தலைவன், பெண்களின் மெல்லியல்பும் பண்பும் அறியாத கொடியவன் என்பதை அவனது தேருக்கு ஏற்றிச் சொல்லும் அழகை என்னென்பது? உண்மையில் தலைவியின் பால் காதல் உடையவனானால் உடன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், நல்லெண்ணம் அற்றவனானால் வருவதை நிறுத்திவிடவேண்டுமென்றும், பெண்ணுள்ளத்தைப் புரிந்து கொண்டு நடப்பதே பண்புடைய செயலென்றும் தலைவன் தோழியால் அறிவு கொளுத்தப் பெறும் நுட்பத்தை எவ்வாறு பாராட்டுவது?

ஐங்குறுநூற்றின் 454-ஆம் பாடல், 'பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து' என்னும் தலைப்பில் உள்ள பத்துப்பாடல்களில் ஒன்றாகும்.

தளவின் பைங்கொடி தழீஇப் பையென
நிலவின் அன்ன நேர் அரும்பு பேணிக்
கார் நயந்து எய்து முல்லை அவர்
தேர் நயந்து உறையும் என் மாமைக் கவினே.

கார்காலம் தொடங்கியும் பிரிந்து சென்ற தலைவன் வரக்காணாத தலைவி தன்துயரைத் தோழியிடம் கூறுகிறாள்.

"எனது மாமை அழகு அவனது தேர் வரவை விரும்பிக் காத்திருக்கிறது. அது, கார்காலத்தில் நிலவைப்போன்ற நிறங்கொண்ட அரும்புகளையுடைய முல்லைக்கொடி, செம்முல்லையின் பைங்கொடியைத் தழுவக் காத்திருப்பதைப்போல் உள்ளது". தலைவனோடு கூட விரும்பும் தன் உடல் நிலையையும் உள்ளக்கிளர்ச்சியையும் ஓர் அரிய உவமையின் மூலம் பண்பட்ட முறையில், விரசமில்லாமல் தலைவி வெளியிடுவதைக் காணலாம். பிரிவுத்துன்பம் நுட்பமாக உணர்த்தப்படுகிறது.

இப்பாடல்களிலெல்லாம் ஒவ்வொரு காட்சியுருவும் ஒரு படிமமாக இயங்குவதையும், படிமங்கள் படிப்போரின் அறிவைத்தூண்டிப் பல வகையான சிந்தனைகளுக்கு இடம் அளிப்பதையும், கவிதையை மீண்டும் மீண்டும் படிக்கும்போது, புதுபுதுப்பொருள்கள் கிடைப்பதையும் ஜார்ஜ் ஹார்ட் சுட்டிக்காட்டுவார். "That is why the deeper one goes into these poems, the more one can find in them" என்பது அவரளிக்கும் பாராட்டு.

இத்தகையக் குறிப்பு உத்தியைத்தான் தொனியென்று ஆனந்தவர்த்தனர் தமது தொனிலோகம் எனும் நூலில் குறிப்பிட்டு, அதற்கு வடமொழிப் பாடல்களைச் சான்றுகளாகத் தருகிறார். ஆனால், அப்பாடல்கள் எல்லாவற்றையும் விட, இங்குச் சுட்டப்படும் ஐங்குறுநூற்றுப் பாடல்களுக்கே தொனிக்கோட்பாடு மிகவும் பொருந்துவதாகும்.

"I know of no Sanskrit or Prakrit poem that produces anuraanarupadhvani, suggestion that takes the form of resonance, so richly and wonderfully as the poems just analyzed"

("அனுரானருபத்தொனியென்று வடநூலார் குறிப்பிடும் தொனி வகைக்கான சான்றுகளாகத் திகழ்பவை இத்தகையத் தமிழ்ப்பாடல்களே. இவற்றையொத்த பாடல்களைச் சமஸ்கிருதத்திலோ, பிராகிருதத்திலோ நான் காணவில்லை".)

அன்னார் குறுந்தொகையிலிருந்தும் சில பாடல்களை எடுத்துக்காட்டுகளாகத் தருவார். தேவகுலத்தார் பாடிய பாடல் குறிஞ்சித்திணையில் தலைவி கூற்றாக வருவது.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.
(குறுந்தொகை, 3)

கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு தான் கொண்ட காதல் நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழமானது என்பாள் தலைவி. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை மலரும் குறிஞ்சிப் பூவோடு ஒப்பிடத்தக்க அருமை உடையவள் தலைவியென்றும், வண்டுகள் பெருந்தேன் இழைக்க நெடுங்காலம் ஆகுமாயினும், அவளது காதல் சில நாள்களிலேயே பிரபஞ்ச வளர்ச்சி பெற்று விட்ட வியப்பை நிலமும், வானும், கடலும் உவமைகளாக்கித் தெரிவிக்குமென்றும் பேராசிரியர் இப்பாடலின் சிறப்பைப் புலப்படுத்துவார்.

நன்னாகையார் பாடல் பாலைத்திணையில் தலைவி கூற்றாக வருவது.

ஈங்கே வருவர், 'இனையல், அவர் என
அழா அற்கோ இனியே? நோய்நொந்து உறைவி!
மின்னின் தூவி இருங்குயில், பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப, மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரல் கூந்தல் தைவருவேனே!
(குறுந்தொகை, 192)

தோழி, 'அவர் விரைவில் வருவாரெ'ன்று கூறியதனைக் கேட்ட தலைவி தோழிக்குக் கூறுவது.

'நீ வருந்தாதே. அவர் இவ்விடத்தே மீண்டும் வருவார்' என்று நான் அழாது இருப்பதற்காகவோ இப்பொழுது நீ இவ்வாறு சொன்னாய். மின்னைப் போன்ற ஒளியுடைய

இறகுகளைக் கொண்ட கருங்குயில் பொன்னை உரைத்து மாற்றுக் காட்டும் கட்டளைக் கல்லைப்போன்று, தன் உடல் பொன்துகள் பெற்றுத் தோன்றுமாறு மாங்கிளையின் இடத்திருந்து நறிய பூந்தாதினைக் கோதியின்புறுகின்ற காலம் இது. நான் இந்த இளவேனில் காலத்திலும் புனைதலற்றுப்போன என் வறிய கொத்தாகிய கூந்தலைத் தடவியிருப்பேன். இளவேனிற் காலத்துப் பிரிந்திருக்க இயலாமையால் கூந்தலைத் தடவுவேன் என்று தலைவி தன் ஏக்கத்தைப் புலப்படுத்துகிறாள். மாம்பூவின் தாதுக்குப் பொற்பொடி உவமை; குயிலுக்குக் கட்டளைக்கல் உவமை.

கடம்பனூர்ச் சாண்டிலியனின் பாடல் பாலைத்திணையில் கிழத்தி கூற்றாக வருவது,

வளை உடைத்தனையது ஆகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி
இன்னாப் பிறந்தன்று பிறையே; அன்னோ
மறந்தனர் கொல்லோ தாமே – களிறு தன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது
நிலை உயர் யாஅம் தொலையக் குத்தி
வெண்நார் கொண்டு, கை சுவைத்து, அண்ணாந்து
அழுங்கல் நெஞ்சமொடு முழுங்கும்
அத்த நீள்இடை அழப் பிரிந்தோரே?

(குறுந்தொகை, 307)

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியைக் கடிந்து கொள்ளும் தோழிக்குத் தலைவி கூறுவது:

வளையை உடைத்தாற் போன்ற வடிவினை உடைய பிறை, கன்னியர் போற்ற வானத்தில் விரைவாக வந்து தோன்றி எனக்கு இன்னாததாகி விட்டது. களிறு தனது இளைய பிடியினது வருத்தத்தைத் தாங்காது, உயர்ந்த யாமரத்தை வீழுமாறு குத்திப் பசையற்ற உதன் வெள்ளிய நாரைப் பிய்த்துக் கைக் கொண்டும் நீரைப் பெறாததாய் வெறுங்கையைச் சுவைத்தபடி,

மேல்நோக்கித்தன் பிடியது வருத்தத்தைப் போக்க முடியாத தன் நிலையை நினைந்து முழக்கமிடும். அத்தகைய வழியில் நாம் அழுமாறு பிரிந்து சென்றார் நம் தலைவர். அவர் நம்மை மறந்து விட்டாரோ?

பிறையைக் கன்னியர் பலரும் தொழத் தனக்கொரு தலைவனைக் களவிலே பெற்றமையால் தான் தொழத்தயங்கும் துன்பம் தலைவிக்கு உண்டானது. பெண் யானையின் துன்பத்தைத் தீர்க்க இயலாது வருந்தும் ஆண்யானையைக் காணும் தலைவன் தன் துயரைப் போக்க வரவில்லையேயென்று ஏங்குவாள் தலைவி.

மதுரைக் கொல்லன் புல்லன் பாடிய பாடல் குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாக வருவது,

நிலம் புடை பெயரினும், நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடு எவன் உடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்பல் ஊகக் கறைவிரல் ஏற்றை
புடைத்தொடுபு உடைஇப் பூநாறு பலவுக்கனி
காந்தள் அம்சிறுகுடிக் கமழும்
ஓங்கு மலை நாடனொடு அமைந்த நம் தொடர்பே.
(குறுந்தொகை, 373)

அலர் மிகுந்த வழி ஆற்றாளாகிய தலைவிக்குத் தோழி உரைப்பது:

ஆண்குரங்கு தோண்டியதால் உடைபட்டுப் பூமணத்தை வீசும் பலாப்பழத்தின் நறுமணம், காந்தளையுடைய சிற்றூரினிடத்தேயும் சென்று வீசும் தன்மையைக் கொண்ட உயரமான மலைகளை உடைய நாட்டினன் தலைவன். அவனோடு இணைந்த நம் நட்பு, உலகமே இடம்மாறிப்போயினும், நீர் தன் பண்பில் திரிந்து வேறொன்றாக மாறுபட்டாலும், பேரலைகளைக் கொண்ட கடலுக்கு எல்லைகள் தோன்றினாலும், வெவ்விய வாயினரான மகளிரின் பழிச்சொற்களை அஞ்சிக் கெடாது.

தலைவனோடு தான் கொண்ட நட்பு என்றும் கெடாது என்று தலைவி உறுதியாகச் சொல்வாள். பலாக்கனியின் மணம் சிறுகுடியிடத்தே வீசுதல் போல் அவர்களது களவொழுக்கமும் அவனது ஊரில் இல்வாழ்வாக மணம் பெற்றுச் சிறக்கும் என்பது குறிப்பு.

கங்குல் வெள்ளத்தார் பாடிய பாடல் முல்லைத் திணையில் தலைவி கூற்றாக வருவது.

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர் சினம் தணிந்த கையறு மாலை
உயிர் வரம்பாக நீந்தினம் ஆயின்
எவன் கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே.

(குறுந்தொகை, 387)

தலைவனைப் பிரியினும் ஆற்றியிருக்க வேண்டும் என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறுவது :

பகற்பொழுது கழிய, முல்லை மலரத் தொடங்க, கதிரவனது வெப்பம் தணிய, செயலறச் செய்யும் மாலைக்காலம் வந்துள்ளது. என் உயிர் கழிதலையே ஒரு வரம்பாகக் கொண்டு என்னை வருத்தும் மாலைக் காலத்தைக் கடப்பேன்; ஆயினும் அதனைத் தொடர்ந்து வரும் இரவாகிய வெள்ளம் கடலினும் பெரிதாயுள்ளது. யான் எவ்வாறு வருந்தாது இருப்பேன்?

மாலையை நீந்துதலே அரிதாயிருக்க இரவென்னும் கடலைக்கடப்பது எவ்வாறு என்று கேட்டு வருந்துவாள் தலைவி.

வடமொழி இலக்கியம் அறிந்தோர் வடமொழிக் காப்பியங்களில் குறிப்பும், படிமமும் (Suggestion and Symbolism) கவிதையுத்திகளாகக் கையாளப்படவில்லையென்பதை அறிவர் என்று கூறும் ஜார்ஜ் ஹார்ட், வடமொழி இலக்கியம் வளர வளர இவ்வுத்திகள் பயன்படுத்தப்பட்டனவென்றும் வடமொழி இலக்கியத்தின் கடைசிப் பெருங்கவிஞரான ஜகந்நாதர் இவற்றிற்குச் சிறப்பிடம் அளித்தாரென்றும்

தெளிவுறுத்துவார். வடமொழி, பிராகிருத இலக்கியங்களில் இவ்வுத்தி இடம்பெறுதலுக்குப் பல நூற்றாண்டுகள் முன்னமேயே தென்னிந்தியக் கவிதையியல் தோற்றம் பெற்றிருப்பதால், இது தமிழிலிருந்தே வடமொழிகளுக்குச் சென்றிருக்க வேண்டுமென்னும் முடிவுக்கு வருவார் அக்கல்வியாளர்.

இம்முடிவை இதனோடு விட்டுவிடாத ஹார்ட் வடமொழிக்காப்பியங்களான மகாபாரதம், இராமாயணம், புத்த சரிதம் ஆகியவற்றில் குறிப்பால் ஆழ்ந்த பொருள் உணர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லையென்பதைப் பல சான்றுகள் தந்து நிறுவுவார். தமிழின் உட்பகைவர்கள், இவ்வுத்தி ஏற்கனவே வடநூல்களில் கையாளப்பட்டுள்ளது என்று அறியாமை காரணமாகவும் கவிதையுணர்வு இல்லாமையாலும் கூறிவருவதற்கு அவர்தரும் விடையிதுவெனக் கொள்ளலாம்.

மகாபாரத்தில் வரும் பாடலொன்று, "தமயந்தி தன் கணவனை மீண்டும் பெற்றபோது அரைகுறை வளர்ச்சி பெற்ற பயிர்களைக் கொண்டிருந்த நிலம் மழையைப் பெற்றது போல் மகிழ்ச்சி அடைந்தாள்" என்று வருணிக்கும். இதில் வரும் ஒருபுடை உவமை, தமயந்தி நளனை மீண்டும் பெற்றிருக்காவிட்டால் அரைகுறை வளர்ச்சிபெற்ற பயிரைப்போல் வீணாகியிருப்பாள் என்பதை மட்டும் சொல்லி அமைகிறது. ஆனால், ஐங்குறுநூற்றுப் பாடலொன்று ஒற்றுமைக் கூறுகளை வெளிப்படையாகச் சொல்லாமல் வாசிப்போரின் கற்பனைக்கு வேலை வைத்து முருகியல் இன்பத்தை மிகுவிக்கிறது.

அணி நடை எருமை ஆடிய அள்ளல்
மணி நிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகள் இவள்
பழன ஊரன் பாயல் இன் துணையே. (96)

இது ஓரம்போகியாருடைய பாடல்; 'எருமைப்பத்து' என்னும் தலைப்பில் வருவது; தலைவியைப் பற்றித் தலைவனின் தோழர்கள் சொல்லுவதாக அமைந்துள்ளது.

இவள், வயல்கள் நிறைந்த ஊரை உடையவனின் மகள். அவ்வயல்களில் எருமைகள் அழகாக அணிவகுத்துச் செல்லும்; மண்ணில் விளையாடும். மணிநிற நெய்தல் மலர்கள் வெண்ணிற ஆம்பல் ·மலர்களோடு ஒளிவீசிப்பூத்திருக்கும். இவள் பழன ஊரனின் இனிய படுக்கைத் துணையாவாள்.

எருமையும் ஆம்பலும் எதைக் குறிக்கின்றன என்பது கவிதையைப் படிப்போரின் சிந்தனைக்கு விடப்பட்டுள்ளதைக் காணலாம்.

உவமையைத் தவிர உருவக அணியும் மகாபாரதத்தில் இடம்பெறுகிறது.

"அர்ச்சுனனாகிய மேலெழுந்து செல்லும் மேகம், திரௌபதி என்னும் காற்றினால் தூண்டப்பட்டுத் தெய்விக அம்புகள் மழைமேகமாக, வெள்ளை நிறக்குதிரைகள் கொக்குகளாக, காண்டிபம் எனும் வில் வானவில்லாகக் கர்ணன் என்னும் தீயை, அம்பு மழையால் அழித்துவிடும்". (3.84.11,12)

இவ்வுருவகமும் படிப்போரின் கற்பனைக்கு எதனையும் விட்டுவிடாமல் மேலலெழுந்தவாரியான உவமைகளைக் கொண்டிருக்கக் காணலாம்.

மகாபாரதத்தில் வரும் வேறு அணிகளெல்லாம் குறிப்பு உத்திக்குச் சற்றும் தொடர்புடையன அல்ல. தமிழ்ப் பாடல்களில் இடம் பெறும் வெளிப்படப் பொருளைச் சொல்லாத உவமைகளோ உருவகங்களோ மகாபாரதத்தில் எங்கும் இல்லையென்பார் ஹார்ட்.

I have been able to discover no instance in which the two objects meant to be compared are mentioned without any word or immediate context that makes the reader compare them, as in the Tamil Poems; nor are there any poems where the camparison extends for beyond one or two qualities in the two objects as in Tamil... in Tamil, on the other hand the poems are so complex that the interplay and implications of the figures in the better poems are virtually inexhaustible and occasionally

even so difficult that the point of the figure cannot be determined today with certainty.

சங்கப் பாடல்களில் இறைச்சி, உள்ளுறை மூலம் சுட்டப்படும் பொருள்கள் பலவாய் அளவு கடந்த இன்பம் தரவல்லனவாய் அமைந்திருக்க, மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் அத்தகைய பாடல்களைக் காண முடியாதெனக் கூறும் ஹார்ட், இராமாயணத்திலும் அத்தகைய முயற்சிகள் தோல்வியுறுவதற்குச் சான்றுகள் தருவார். சுந்தர காண்டத்தில் ஒரு பாடல் இலங்கை நகரை ஒரு பெண்ணாக உருவகிக்கும். தண்ணீர் அப்பெண்ணின் ஆடையாகவும், அகழிக்கரைகள் அவளது இடையின் பின் பகுதிகளாகவும் சதாக்னி, சூலம் போன்ற ஆயுதங்கள் அவளது தலைமுடியாகவும் காட்சி தந்தனவாம். இத்தகைய வருணனைகளின் செயற்கைத் தன்மையும் வலிந்து பொருள்கொள்ள வேண்டிய நிலையும் நகைப்புக்குரியனவேயன்றி நயம் பாராட்டற்குரியன அல்ல. சுந்தர காண்டத்தில் வரும் இன்னொரு பாடல் இராவணனின் அந்தப்புரத்தில் அனுமன் கண்ட பெண்களைச் சித்திரிக்கும். ஆடை குலைந்த நிலையில் மதுவருந்தித் தூங்கிக் கொண்டிருந்த அப்பெண்களின் படுக்கையறை, அன்னங்களும் வண்டுகளும் ஓசையின்றியிருந்த ஒரு தாமரைக்குளத்தை ஒத்தது என்பார் கவிஞர். அவர் சொல்லவிழைவது அவர்கள் பேச்சு, அன்னங்கள் எழுப்பும் குரல் ஒலிகளையும், அவர்களுடைய அணிகலன்களின் ஓசை வண்டுகளின் ரீங்காரத்தையும் ஒத்திருந்தது என்பதாம்.

அவ்வந்தப்புரப் படுக்கையறையில் சில பெண்கள் அணிந்திருந்த மாலைகள் காட்டில் யானைகளால் அழிக்கப்பட்ட கொடிகளைப் போல் சிதறுண்டிருந்தன என்பது இன்னொரு பாடலின் பொருள். இது சுட்டுவது, இராவணன் என்னும் யானையால் காதல் போரில் அப்பெண்களின் மாலைகள் சிதைக்கப்பட்டன என்பதாம். தமிழில் ஆண், பெண்ணைப் புணர்வதற்கு, யானை, கொடிகளைப் பாழாக்குதல் படிமமாக வருதலைப் பல பாடல்களில் காணலாம் என்று கூறும் ஹார்ட் ஒரு குறுந்தொகைப் பாடலைச் சான்றாகத் தருவார்.

தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் றாஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழில்
பூணக வனமுலை நனைத்தலும்
காணார் கொல்லோ மாணிழை நமரே. (348)

மாவளத்தனார், சொல்லால் தீட்டும் அழகிய காட்சி வால்மீகியின் வருணனைக்கு மூலமாய் அமைந்தவற்றுள் ஒன்றாக இருக்கலாம் என்பார் ஹார்ட்.

Such suggestive figures are unusual in the Ramayana and where they appear, they often use images found also in Tamil Poetry as in the above example.

வடமொழி இராமாயணத்தில் மகாபாரதத்தைக் காட்டிலும் மிகுதியான சங்கச்சான்றோர் பாடல்களின் தாக்கத்தைக் காணலாம் என்பது ஹார்ட்டின் முடிவு.

குறிப்பால் பொருள் உணர்த்தும் உத்தியை இராமாயண, மகாபாரதக் காப்பியங்களுக்குப் பிறகு அசுவகோசரின் புத்தசரிதம் ஒரு சில இடங்களில் கையாளும். அந்நூலில் வரும் அந்தப்புரப் படுக்கையறைக் காட்சியைக் காட்டும் ஒரு பாடல் வருமாறு:

பொன்னணிகளும் மஞ்சள் பட்டாடைகளும்
அணிந்த பெண்கள் ஆழ்ந்த தூக்கத்தால்
செயலிழந்து கீழே விழுந்து கிடந்தனர்.
அவர்கள் யானையொன்றால் ஒடிக்கப்பட்ட
கரிகார மரக்கிளைகளை ஒத்திருந்தனர்.

வால்மீகியைப் போன்றே அசுவகோசரும் வெளிப்படையான வருணனைகளிலேயே பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ளார். இன்னொரு பெண்ணின் மார்பகங்களிலிருந்து வெண்ணிற ஆடை நழுவிக்கிடந்தது. வண்டுகளால் துய்க்கப்பட்ட தாமரை மலர்களையும், நீர்த்துளிகள் புன்னகை செய்யும் கரைகளையும்

கொண்டிருந்த ஓர் ஆற்றைப் போன்றிருந்தாள் அப்பெண். குறிப்பென்னும் உத்தியை இக்கவிஞர்கள் இன்னும் திறம்படக் கற்றிலர் என்பது இச்சான்றுகளால் புலப்படும்.

சத்தசாயி - யில் வருணனைகளே மிகுதியானாலும் குறிப்பால் பொருள் உணர்த்தும் உத்தி சில பாடல்களில் கையாளப்படுகின்றது.

ஒரு பாடலில் தலைவி தன்னுடைய தாயிடம் சொல்கிறாள்: அன்னையே, மக்கள் நம்பிக்கை காரணமாகப் பிரிவைப் பொறுத்துக் கொள்கிறார்கள். ஆனால் ஒரேவொரு சிற்றூரால் பிரிக்கப்பட்டிருப்பது இறப்பினும் மோசமானதாகும். (43)

இவளுடைய கணவன் அவள் வாழும் சிற்றூர்க்கு அடுத்த சிற்றூரில் இருக்கின்றானாயினும் அவளை விரும்பாததால் அவளிடம் வருவதில்லையென்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

இன்னொரு பாடலில் தலைவியால் அனுப்பப்பட்ட பெண், வண்டிடம் பேசுவது போல் தலைவனுக்கு அறிவுரை கூறுகிறாள். **வண்டே, முன்னெல்லாம் நீ வேறு மலர்களை நாடிச் செல்லமாட்டாய். ஆனால், இப்பொழுது மாலதி மலர் காய்த்திருப்பதால், அதனைப் புறக்கணித்து விட்டாய். (92)** முன்பு தலைவியைத் தவிர வேறு பெண்களிடம் செல்லாத தலைவன், இப்பொழுது அவள் கருவுற்றிருப்பதால் அவளை அணுகுவதில்லையென்பது குறிப்பால் சுட்டப்படுகிறது.

சத்தசாயி நூலிலும் கூட குறிப்பெனும் உத்தி தமிழ் அகப்பாடல்களில் கையாளப்படுவது போல் நுட்பமாகக் கையாளப்படவில்லையென்பதை ஹார்ட் மீண்டும் மீண்டும் சான்றுகளோடு எடுத்துக் காட்டுகிறார்.

In these and other examples in the Sattasai Certain one – to – one correspondences are suggested and the entire effect of the poem lies in the reader's making the proper connections, so that he can ascertain a situation or set of facts

that he does not know. ... The relevant facts about the jasmine are straight forward and easily discernible. In Tamil, the suggestion is usually more complex.

குறுந்தொகை 25-ஆம் பாடல் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உரியதாகும்.

யாரும் இல்லைத் தானே கள்வன்
தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே!

“தலைவன் சூள் பொய்த்தான்; குருகைத் தவிர சான்றாவார் யாரும் இலர். ஆரலைக் கொலை செய்யும் கருத்துடன் நின்ற குருகும் சான்றாதற்கு வழியில்லை. யான் என் செய்வேன்?” என்று தலைவி புலம்புகிறாள். தன்னலம் கருதலில் தலைவன் குருகை ஒத்துள்ளான் என்ற கருத்தும் வெளிப்படுகிறது.

தமிழ் அகக்கவிதை மரபுகளும் அணிகளும் இந்தோ – ஆரிய மொழி நூல்களில் முதல் முதலாகத் தோற்றம் தருவது சத்தசாயியில் என்றும் அது எழுதப்பட்டுள்ள மகாராஷ்ட்ரி மொழி தெற்கத்தியப் பிராகிருதம் என்றும் மகாராஷ்ட்ர, தெலுங்கு நாடுகளை ஆண்ட சாதவாகனர்கள் காலத்திலேயே ‘சத்தசாயி'யின் ஒரு பகுதி உருவானதென்றும் ஹார்ட் தெரிவிப்பார். எனவே, தமிழ் அகக்கவிதை மரபு மகாராஷ்ட்ரி - பிராகிருத மரபு மூலமாகக் காளிதாசனுக்கும் பிற வடமொழிக் கவிஞர்களுக்கும் சென்றிருக்க வேண்டுமென்பது பெறப்படும்.

சத்தசாயி நூல் படம்பிடிக்கும் சமுதாயம் பழந்தமிழ்ச் சமுதாயத்தைப்போல் கற்பிற்கு உயர்வளிக்கவில்லை. எனவே, அதன் தோற்றத்தில் திராவிட, ஆரியக் கலப்பு இருந்திருக்க வேண்டுமென்பதும் ஹார்ட்டின் ஆய்வு முடிவு.

சத்தசாயி மூலம் வடமொழியில் நுழைந்த தமிழ்க்கவிதை மரபைக் காளிதாசன் முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொள்கிறான் என்பதற்கு ஹார்ட் தரும் சான்றுகள் பல.

இளவரசனாகிய அஜன் நன்றாகக் கட்டப்பட்ட படிகளில் ஏறி மேடையை அடைந்தான். முன்னும் பின்னும் தள்ளிக் கொண்டிருக்கும் பாறைகளைத் தாண்டி மலை உச்சியை அடையும் விலங்குகளின் அரசனாகிய அரியை ஒத்திருந்தான் அவன். (ரகுவம்சம், 3)

அரியணையில் வீற்றிருந்த அஜன் மயில்மேல் அமர்ந்திருக்கும் குகனைப் போலிருந்தான். (ரகுவம்சம், 4)

சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களிடையே மட்டும் பல மேகங்களைப் புறந்தள்ளி ஒளிவீசும் மின்னலாக விளங்கினான். (ரகுவம்சம், 5)

கருவண்டுகள் பழமரங்களிலிருந்து நீங்கி மதநீர் வடியும் காட்டு யானை ஒன்றன் மேல் விழுவதைப்போன்று, குடிமக்களின் கண்களெல்லாம் ஏனைய அரசர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு அஜன்மேல் விழுந்தன. (ரகுவம்சம், 7)

மானச ஏரியில் காற்றினால் எழுப்பப்படும் அலையானது அன்னத்தை ஒரு தாமரை மலரிலிருந்து இன்னொன்றிற்குத் தூக்கிச் செல்வதைப் போன்று அந்த இளம் பெண்ணே இளவரசியை ஓர் அரசனிடமிருந்து இன்னோர் அரசனுக்கு அழைத்துச் சென்றாள். (ரகுவம்சம், 26)

இந்த வருணனைகளிலெல்லாம் கூட குறிப்பு, தமிழ் அக இலக்கியங்களில் போன்று அவ்வளவு நுட்பமாகக் கையாளப் படவில்லையென்பது ஹார்ட்டின் கருத்து.

The chief purpose of the images in these lines is to enhance the description of the subjects; no subtle interplay of connotations is intended.

தமிழ் அக இலக்கியங்களில் கையாளப்பெறும் இறைச்சியும் உள்ளுறையும் எவ்வாறு பெரும்பாலும் கவிதைகளில் வரும் உவமை, உருவக அணிகளிலிருந்து வேறுபட்டுச் சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளன என்பதை வியந்து பாராட்டும் ஹார்ட், வடமொழிக் கவிஞர்களில் தலை சிறந்தவனாகிய காளிதாசன், சத்தசாயி போன்ற நூல்களிலிருந்து தமிழ் அகமரபின் தாக்கத்தைப் பெற்றான் என்பார். காளிதாசனின் மேகதூதத்திலிருந்தும் அவர் ஒரு சான்று தருகிறார்.

தலைவன் தன் காதலியிடம் மேகம் என்ன சொல்ல வேண்டுமென்பதைக் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றான்:

விஷ்ணு, பாம்புப் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் என் மீதுள்ள சாபம் முடிவுக்கு வரும். உன்னுடைய கண்களை மூடிக்கொண்டு, எஞ்சியுள்ள நான்கு மாதங்களைப் பொறுத்துக் கொள். அதன்பிறகு இலையுதிர் காலத்து முழுத்திங்கள் ஒளிவீசும் இரவுகளில் நாம் நம் விருப்பமெல்லாம் நிறைவுறப் பேருவகை கொள்வோம்... வடக்கில் ஆன்மிக அதிகாரமானது பிராமணர்களுக்கும் வேதங்களுக்கும் உரியது. அவர்கள் சொல்லும் செய்தி, வாழ்க்கையின் இறுதி இன்பம் தவத்தாலும் பிரம்மாவோடு இணைவதாலும் அடையப்பெறுவது என்பதாகும். தெற்கிலோ, வாழ்க்கையில் குடும்பமே தலையாயது, மிகவும் புனிதமானது; கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள நல்லுறவே மாந்தரின் இன்ப வாழ்விற்கு மூலமானது; சமுதாயம் நல்ல முறையில் இயங்குதற்குக் காரணமானது.

(மேகதூதம், 106)

இவ்வாறு துறவியடையும் முக்தி நிலையைப் பிரிந்த காதலர் கூடும் இன்பத்தோடு ஒப்பிட்டுப் பேசுவான் காளிதாசன்.

ஒருவனுக்கு ஒருத்தியென்று வாழும் இல்லற வாழ்வின் சிறப்பு தமிழகத்திலிருந்து வடபுலத்திற்குச் சென்ற பின் காளிதாசனின்

காவியங்கள் எழுதப்பட்டதால் அதன் தாக்கத்தை அவற்றில், குறிப்பாக, அவனது தலைசிறந்த காவியமான குமாரசம்பவத்தில் காணலாம் என்று ஹார்ட் புலப்படுத்துவது நம்மவர் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

இறுதியாகப் பழந்தமிழ்க் கவிஞர்களையும் வடமொழிக் கவிஞர்களையும் ஒப்பிட்டு முன்னவரின் கவிதைமரபு பின்னவரின் கவிதைமரபினும் எவ்வாறு பெருஞ்சிறப்புடையது என்பதையும் ஹார்ட் தெளிவாக்குவார்.

The Tamil poetry was composed by sophisticated poets who had written poems for much of their lives and who used a group of conventions that had been refined and made more sophisticated for many years. They often wrote poems of thirty or forty lines in which many different figures were used and allowed to interact to produce suggestive effects whose permutations are virtually unlimited. The Prakrit poems, on the other hand, are all quite short and almost never contain more than one image. They appear to be much closer to folk poetry than most of the Tamil poems and they are consequently simpler.

வடமொழிப் பேராசிரியராகிய ஜார்ஜ் ஹார்ட் கிரேக்கம், இலத்தீன் போன்ற மேலைச் செம்மொழி இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றவர் என்பதை நாம் இங்கு நினைவுகூர்தல் தேவையானதாகும். சங்கச் சான்றோர் பாடல்களோடு ஒப்பிடும்போது, பிற செவ்வியல் மொழிகளிலும், இன்றைய மொழிகளிலும் உள்ள பாடல்களெல்லாம் எவ்வாறு தரத்தால் தாழ்ந்தவை என்பது அவரது ஆழ்ந்த ஆய்வினால் நாம் அறிந்து கொள்ளும் செய்தியாகும்.

சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும் மறைவும்

பேராசிரியர் பழனி. அரங்கசாமி
மேனாள் ஆங்கில பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை. செல் : 94865 76619

தமிழ் மொழியின் இலக்கணப்பிரிவுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் அய்ந்தனுள் சொல் இலக்கணமும் ஒன்று. அய்ந்தன் முறை வைப்பிலேயே இரண்டாவதாக நிற்பதே சொல்லின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. உலக மொழியாகப் பேசப்பெறும் ஆங்கிலத்தில் யாப்புக்கும் அணிக்கும் தனி இலக்கணம் இல்லை. உலகளாவிய மொழியே ஆயினும் இத்தாலிய, கிரேக்க மொழிகளின் கவிதை அமைப்புக்கு ஆங்கிலமொழி கட்டுப்பட்டது என்பதை எண்ணுந்தொறும் தமிழின் தொன்மையும் மேன்மையும் தனிச்சிறப்பும் நன்கு விளங்கும்.

சொற்களின் ஆற்றல்

எந்த மொழிக்கும் எழுத்தாகிய வரி வடிவமே ஆதாரம் என்றால் அதற்கு அடுத்த நிலையில் இருப்பதே சொல். அது பெயர், வினை, தலைப்பு, கருத்து ஆகியவற்றைச் சுட்டிக்காட்டும். எழுத்துகளை ஆதாரமாகக் கொண்ட சொல்லானது பொருளோடு இணையும்போது அவை சார்ந்த எந்த மொழியும் உயிர்பெற்று இயங்குகிறது. நகமும் சதையும் போல் சொற்கள் வலிவும் பொலிவும் பெறுகின்றன. பொருளில்லாத சொற்கள் வெற்றொலிகளாய் வீணாகிப் போய் பயனின்றி நிற்கும். பயன் தரும் சொற்களின் ஓசைக்கும் ஒலிக்கும், உயிர்ப்பும் உணர்வும் இருக்கிறது. கேட்போரைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் இருக்கிறது. இசையாக ஒலிக்கும்போது செவிக்கின்பம் பயக்கிறது. உரத்த ஓசையாக வரும்போது ஒருவரது உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. சொல்லினது ஓசைக்கும் ஒலிக்கும் இவ்வளவு முக்கியத்துவம் இருப்பதனாலோ என்னவோ தேவாரச் சொற்றொடர் இறைவனைப் பற்றி, ‘ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே’ என்று விளக்கம் தருகிறது.

கருத்தாழமும் சிந்தனைத் தெளிவும் மிகுந்த கவிஞனின் ஆளுமையில் அவன் நினைத்தபடி ஒரு காட்சியை உருவாக்கும் ஆற்றலை அவன் கையாளும் சொற்கள்தான் உண்டு பண்ணுகின்றன. நாடு புகழ் பாரதியின் பாடு பொருளான **ஊழிக்கூத்து** பற்றிய கவிதையே இதற்குச் சான்று.

வெறும் வெளியில் ரத்தக்களியொடு பூதம் பாட
பாட்டின் அடிபடு பொருளும் நின் அடிபடும் ஒலியில் கூட
களித் தாடும் காளி கங்காளி
ஆடும் கூத்தை நாடச் செய்தாய் என்னை என்னை
(வரி. 2-5)

சேதுபதி மன்னரின் குதிரைப் படை ஆவேசத்தோடு போரிடும் காட்சியை

மண்டலங்களும் தயங்க மந்தரம் சுழன்றொதுங்க
அண்ட பிண்டமும் கலங்க அந்தரம் திரண்டெழும்ப
அட்டதிக்கும் எட்டுவெற்பும் அப்புறப்ப டக்குதித்து
வட்டமிட்டரைக் கணத்தில் மைப்புயல் திரட்டகற்றி
மற்றறச் சினத் தெதிர்த்த மக்கரைப்படத் துவைத்து
வெற்றி பெற்ற சக்ர வட்டவெண்பரியான்
(தசாங்கம்:5, குதிரை:3-8)

என்று சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் **விறலிவிடு தூதி**ல் காட்டுகிறார். குதிரைப்படையின் காட்சியையும் அடுக்குச் சொற்களின் மிடுக்கையும் ஆற்றலையும் ஈண்டு காண்கிறோம்.

வெறும் சொற்களை அறிதல், உணர்தல் மட்டும் போதாது. நிலைமைக்கேற்ப அவற்றைப் பயன்படுத்தி ஏற்ற இறக்கத்தோடு மேடையேறி முழங்கவும் தெரிதல் வேண்டும். அத்தகையோர் மக்கட் சமுதாயத்தைக் கட்டியாள முடியும் எனும் கருத்தைத்தான் குறள் எடுத்தியம்புகிறது.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (647)

ஆங்கில மொழியின் சொற்பெருக்கம்

மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கான ஒரு சாதனமாக இருப்பதுவே சொல். சொற்பெருக்கம் உள்ள எந்த மொழியும் வளமான மொழியாகக் கருதப்படுகிறது. பேச்சிலும் எழுத்திலும் உயிர் பெற்று உலவுகின்ற அனைத்து மொழிகளிலும் சொல்லின் வளர்ச்சியைக் காண முடியும். பொதுவாக ஆழ்ந்த சிந்தனையும், அனுபவங்களும், புதிய கண்டுபிடிப்புகளும் புதுப்புது சொற்களை உண்டு பண்ணக்கூடிய ஆதாரமாக விளங்குகின்றன. பேச்சு வழக்கற்ற மொழிகளில் சொல்லின் பிறப்புக்கோ பெருக்கத்துக்கோ இடமில்லை. இலக்கியம், இலக்கணம், இசை, ஓவியம், நுண்கலை ஆகிய துறைகளில் முற்காலத்திலிருந்தே புழக்கத்தில் இருக்கும் சொற்களோடு இன்றையக்கால அறிவியல், பொறி இயல் வளர்ச்சியினால் பன்னூற்றுக்கணக்கான சொற்கள் அண்மைக் காலத்திய ஆங்கில மொழியில் இடம் பெற்று வருகின்றன.

இன்றைய ஆங்கிலத்தின் வயது ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள்தான். பல்வேறு அறிவியல், பொறி இயல் துறைகளின் கலைச் சொற்களை ஒதுக்கிவிட்டு உலகியல் புழக்கத்தில் உள்ள ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கையே ஆக்ஸ்பர்டு ஆங்கில அகராதி கூறுகின்றபடி ஆறு இலட்சத்துக்கு அதிகம் என்று அறிகிறோம். 2010 - ஆம் ஆண்டு வெளியாகியுள்ள **காலின்ஸ் அகராதி** ஆங்கில மொழியின் சொற்கள் ஆறரை இலட்சத்துக்கு மேற்பட்டவை என்று குறிப்பிடுகிறது. பொறி இயல், கணினி இயல், அறிவியல் சொற்களேயன்றி ஏனைய இலக்கிய, இலக்கண, மனித வளச்சொற்களை மட்டும் உள்ளடக்கிய விரிவான ஆங்கில அகராதி இருபது பெரிய தொகுதிகளாக வெளியாகி உள்ளது.

தமிழில் அகராதிகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மைவாய்ந்த தமிழ் மொழியில் அத்துணைச் சொல் வளம் இல்லை. சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆங்கில - தமிழ்

சொற்களஞ்சியத்தில் ஏறத்தாழ எழுபத்து மூவாயிரம் தமிழ்ச்சொற்களே உள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் வெளியிட்ட **பொது ஆட்சிச்சொல் அகராதி, கலைக்கதிர் வெளியீடான அறிவியல் அகராதிகள், கதிரைவேற்பிள்ளை அகராதி, மதுரை தமிழ்ச்சங்கப் பேரகராதி** ஆகியவற்றையும் சேர்த்து தமிழ்ச் சொற்களைக் கணக்கிட்டால் நான்கு லட்சத்துக்கு மேல் இருக்க வாய்ப்பில்லை. தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் **தனித் தமிழ்ப் பேரகராதி** மூன்று தொகுதிகளோடு முற்றுப் பெறாமல் உள்ளது. தென் கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் வாழும் தமிழர்களின் பேச்சு வழக்கிலிருந்தும் சொற்களைத் திரட்டி ஒட்டு மொத்தமான தமிழ்ச் சொற்களைக் கணக்கிடுவதோடு தமிழின் சொல் வளத்தை மேலும் பெருக்குவது தமிழ்ச் சமுதாயம் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத கடமையாகும்.

சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் அமெரிக்க இராணுவ இரகசியங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப் பெற்ற கணினி அறிவியல் இன்றைய நிலையில் உலகளாவிய கருத்துப் பரிமாற்றப் பொருளாக மாறி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலந்தொட்டு கணினிப் பயன்பாட்டுச் சொற்கள் மட்டுமே ஆயிரக்கணக்கில் ஆங்கில மொழியில் குடியேறி உள்ளன. நூறு கோடி சமக்கூறுகளைக் குறிப்பிடும், **நானோ டெக்னாலஜி** எனும் இக்காலத்திய அறிவியல் துறையினால் நூற்றுக்கணக்கான சொற்கள் ஆங்கிலத்தில் உருவாகி உள்ளன. காலந்தொறும் பெருகி வருகின்ற அறிவியல்துறையின் திறமை வாய்ந்த நிபுணர்கள் தமிழராக இருப்பின், தமது அரிய கண்டுபிடிப்புகளுக்கு தமிழில் பெயர் வைத்தால் அத்தகையப் புதுச் சொற்கள் தமிழுக்கு வலிவும், பொலிவும் தருவதோடு ஏனைய அயல் மொழிகளுக்கும் ஆதாரமாக அமையும். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விமானங்கள் குறித்த ஆய்வு பிரெஞ்சுக்காரர்களால் கையாளப்பட்டமையால் விண்வெளிப் பயணம் பற்றிய பற்பல சொற்கள் பிரெஞ்சு மொழியில் உள்ளன.

சொல் வரலாற்று அகராதிகள்

இத்தகைய சிந்தனை ஓட்டத்திற்கு அப்பால் எந்த மொழியிலும் சொற்கள் எப்படி உருவாகியது என்று காண்பது ஒரு சுவையான இலக்கியப் பயிற்சியாகும். தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த சொற்கள் எவ்வாறு பல், நாக்கு, மூக்கு, உதடு ஆகியவற்றின் உதவியால் ஒலி வடிவமாக வெளிப்படுகிறது என்பதோடு, அவற்றின் இலக்கண அமைதி, மாற்றம், புணர்ச்சி, அளபெடை, உருபு நிலை, வழுவமைதி போன்றவற்றையும் கூறுகின்றனவே தவிர சொற்கள் எவ்வாறு உலக வழக்கிற்கு ஏற்பத் தோற்றம் எடுத்துள்ளன என்பதைக் கூறவில்லை. இடுகுறியாகவும், காரணமாகவும், திசைச் சொல்லாகவும், தற்பவமாகவும், தற்சமமாகவும் சொற்கள் தோன்றுகின்றன என்று பொதுப்படையாகச் சொற்களின் வளர்ச்சியினைச் சுட்டிக் காட்டுகின்றன. இலக்கண நூல்களின் நோக்கமும், கொள்கையும் சொற்களின் பிறப்பினை மட்டும் கூறுவதல்ல. சொற்களின் தோற்றத்தையும் அவற்றின் வரலாற்றினையும் குறிப்பிட்டுக் கூறவேண்டும்: அதுவே சொல் வரலாற்று அகராதி (Etymology) ஆகும்.

எந்த மொழியிலும் உள்ள சொல்லகராதி அந்த மொழியின் சொற்கள் அனைத்திற்கும் வரலாறு கூற இயலாது. பத்தாம் நூற்றாண்டிலிருந்து முழு உருவம் பெற்ற ஆங்கில மொழியிலேயே அம்மொழியின் சொல்லகராதியினைச் சென்ற இருபதாம் நூற்றாண்டில் 1923-ஆம் ஆண்டில் - **டீ.ஸ்கீட்ஸ்** என்பார் தொகுத்தார். அதன் பின்னர் **டி.எப். ஹோட்** அப்பணியினை 1996-ஆம் ஆண்டு மேலும் திருத்தமுறச் செய்தார். அப்படி இருந்தும் ஏராளமான ஆங்கிலச் சொற்களுக்கு அவர்களாலேயே ஆதாரம் கொடுக்க இயன்றிலது. அண்மைக்காலத்திய ஆங்கில மொழியின் சொல் வரலாற்றுக்கே இந்நிலை என்றால் பழம்பெரும் தமிழ்மொழியின் ஆயிரக்கணக்கான சொற்கள் அனைத்திற்கும் எவ்வாறு வரலாறு கூற இயலும்? அனைத்துச் சொற்களின் பிறப்பு, வளர்ப்பு பற்றிய வரலாற்றினை ஆய்ந்து காணுதல் முற்றுமாக இயலாவிடினும், அந்தத் துறையில் தொடக்க கால முயற்சி எடுத்த மாகறல் கார்த்திகேய முதலியார்

1913-ஆம் ஆண்டு **மொழி நூல்** (1913) எழுதி வெளியிட்டார். அந்நூலின் இலக்கண இயல் சொற்களின் பிறப்பு பற்றி ஆய்ந்துரைக்கிறது. யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசர் 1923-ஆம் ஆண்டில் **சொற்பிறப்பு ஆராய்ச்சி நூல்** ஒன்றனை எழுதியுள்ளார். பின்னர், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகச் சொற்களின் வரலாற்றை யாரும் தனிப்பட ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. ஆயினும், கிறித்தவ சகாப்தத்திற்குப் பின்னர் பற்பல நூற்றாண்டுகளாக அயலார் நுழைவு, அன்னியர் போராட்டம், வணிகத் தொடர்பு, இலக்கியப் பரிமாற்றம், சமயச்சார்பு ஆகியவற்றினால் ஏராளமான பிறமொழிச் சொற்கள் தமிழில் உருமாற்றம் பெற்று புழக்கத்துக்கு வந்து விட்டன. அண்மைக்காலத்திய, **சொற்பிறப்பியல் அகரமுதலி** தொடர்ந்து எழுதப்பெறல் வேண்டும்.

தமிழில் வடமொழி நுழைவு

இன்றைய நிலையில் தமிழின் தலை நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலேயே

வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே
(எச்சவியல், நூ.5)

என்று வடசொல்லை நீக்கி அதனைத் தமிழாக்கி அனுமதிக்க வழி வகுக்கப் பெற்றுள்ளது. இதனைச் செயற்படுத்துவதிலும் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெயரை இராசாசி என்று **முரசொலி நாளிதழ்** அச்சிட்டிருந்தது. அது பற்றி அந்நாளிதழின் ஆசிரியர் கலைஞர் கருணாநிதி அவர்களின் கருத்தும் அவர் எடுத்த முடிவும் ஈண்டு நோக்கத்தக்கன.

"ஒரு முறை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முரசொலிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். எம்.ஜி.ஆர்., ஜானகி, ராஜேந்திரன், விஜயகுமாரி என்றெல்லாம் செய்தி வெளியிடுகின்ற முரசொலியில் என் பெயரை மட்டும் ராசாசி என்று வெளியிடுவது நியாயமா என்று கேட்டிருந்தார். அன்றைக்கே அவரது நியாயத்தை ஏற்றுக் கொண்டு மாற்றிக் கொண்டேன். எடுத்துக்காட்டாக, உஷா 'சில்க் ஹவுஸ்'

என்பதை, உஷா 'பட்டாடை நிலையம்' என்று எழுதினால் போதும். உசா என்று மாற்றிடத் தேவையில்லை".(**ஆட்சிச்சொல் அகராதி, முன்னுரை, 2000).**

வடமொழியில் தமிழ்ச்சொற்கள்

தொல்காப்பியத்திற்குப் பின்னர் வந்த சங்க நூல்களில் கூட வடசொற் கலப்பு மிகவும் அருகியே காணப்படுகிறது. வடசொல் நுழைவு பற்றிப் பேசிடுவோர் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்ற சொற்களைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. ஆரியப்பூசாரியர் தமிழகம் வந்த பின், தமிழ்ச் சொற்களை ஏராளமாகக் கையாண்டும், அவற்றினின்று நூற்றுக்கணக்கான நுண்பொருட்சொற்களைத் திரித்துக் கொண்டும், சமற்கிருதம் என்னும் இலக்கிய நடைமொழியைப் பெருவளப்படுத்தி தமிழ் நூல்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் பெயர்க்கத் தொடங்கினர். டாக்டர் கிட்டல் என்பார் 1894 - ஆம் ஆண்டு தொகுத்த கன்னட அகராதியில் நாடகம், பலி, பக்கம், பேய் முதலிய சொற்களைத் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளிலிருந்து வடமொழி கடனாகப் பெற்றுள்ளது என்கிறார். தமிழ்ப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் தாம் எழுதிய, **வடமொழி வரலாறு** (1967) எனும் நூலில் நூற்றுக்கணக்கான வடமொழிச் சொற்கள் தமிழிலிருந்து பிறந்தவை என்று சான்றுகளுடன் நிறுவியுள்ளார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் **வந்தவர் மொழியா, செந்தமிழ்ச் செல்வமா** எனும் தமது நூலில் வடசொல்லாகக் கருதப்பெறும் பற்பல சொற்கள் தமிழ்மொழிச் சொற்களே என்பார். கதா, அலாதி, அச்சாரம், ஜடை போன்றவை வடமொழியில் எடுத்தாளப் பெற்ற தமிழ்ச்சொற்கள் என புரட்சிக்கவிஞர் தகுந்த ஆதாரமுடன் விளக்கிக் கூறுகிறார்.

தமிழில் பிற மொழிச் சொற்கள்

தமிழின் தலைசிறந்த நீதி நூலாகிய திருக்குறளில் பயின்று வரும் பன்னீராயிரம் சொற்களில் ஏறத்தாழ அய்ம்பது சொற்களே வட சொற்கள் என்கிறார் குறளை ஆங்கிலத்தில் பெயர்த்த ஜே.லாசரஸ். இந்த அய்ம்பது சொற்களை மகாவித்வான் ச.தண்டபாணி தேசிகர் பட்டியல் இட்டுக் காட்டுகிறார்.

சங்க காலத்திற்குப் பின்னர் சிறுகச் சிறுக தமிழ் நூல்களில் வடமொழியின் குடியேற்றம் பெருகத் தொடங்கியது. கி.மு. ஆறு மற்றும் ஏழாம் நூற்றாண்டுகளில் பல்லவ மன்னர்கள் வடமொழியைப் பெரிதும் ஆதரித்தவர்கள். பாகூரில் வடமொழிக் கல்லூரி ஒன்றையே நிறுவியிருந்தான் மகேந்திரவர்மன். சமணர் காலத்தில் தமிழில் வடமொழியைப் பாதிக்குப் பாதி கலந்து உருவாக்கப்பெற்ற மணிப்பிரவாள நடையும் சிறிதுகாலம் தலைதூக்கி நின்றது.

தமிழ்நாட்டில் முகமதியர் ஆட்சிக் காலத்தில் அரபு, பாரசீகம், உருது ஆகிய மொழிகளின சொற்கள் தமிழர்களது பேச்சு வழக்கில் கலந்து விட்டன. காலப்போக்கில் உரைநடையிலும், பாக்களிலும் கூட சிற்சில சொற்கள் இணைந்து விட்டன. சான்றாக, முசாபரி, கஜானா, சிப்பாய், பங்களா போன்ற உருது மற்றும் பெர்சியச் சொற்களை எடுத்துக் காட்டலாம்.

அருணகிரியாரின் பாடற்பகுதி ஒன்றில் **சித்தர் விஞ்சையர் மாகர் சபாசென** எனுமிடத்தில், 'சபாஷ்' எனும் சொல்லும், குமரகுருபரரின்

குறவர் மகட்குச் சலாமிடற்கு ஏக்கறு
குமரனை முத்துக்குமரனைப் போற்றுதும்

எனும் வரிகளில், 'சலாம்' எனும் சொல் வருவதும் குறிப்பிடத்தக்கன.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய மண்ணில் வாணிகம் செய்ய வந்து இந்த அயலகத்து மண்ணில் ஆட்சியும் புரிந்த அய்ரோப்பியரின் இடையீட்டினால் ஆங்கிலம், பிரெஞ்சு, போர்ச்சுகீசிய மொழிச் சொற்கள் தமிழில் இடம் பெற்று விட்டன.

ஆங்கிலத்தில் தமிழ்ச் சொற்கள்

மிளகுநீர், சுமார், கட்டுமரம் ஆகிய தமிழ்ச்சொற்கள் ஆங்கிலத்திலும் இடம் பெற்று விட்டன. ஆக்சுபர்டு ஆங்கில அகராதியின் ஆறாம் பதிப்பில் கடைசி நூறு பக்கங்களில் தமிழ் உள்ளிட்ட அனைத்து இந்திய மொழிகளில இருந்தும் ஆங்கிலம் எத்தனைச் சொறகளை ஏற்றுக் கொணடுள்ளது என்பதனை ஒரு

படடியல் போட்டுள்ளனர். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய அண்டை மாநிலச் சொற்களோடு தமிழில் போர்த்துக்கீசிய, அராபிய, உருதுச் சொற்களும் கலந்துள்ளன என்பதைச் சான்றுகளோடு நிறுவி உள்ளார் மாவட்ட ஆட்சியராக இருந்த முத்துசாமிபிள்ளை. (**தமிழ் உரைநடை வரலாறு, 1988**).

இப்படி மொழிகளுக்கிடையே காலந்தொறும் எவ்வித வேற்றுமையும் இன்றி சொற்களின் கொடுக்கல், வாங்கல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் வடமொழி வெறியும், ஒரு சார்பு நோக்கமும் கொண்ட சாமிநாத தேசிகர் தாம் இயற்றிய, **இலக்கணக்கொத்து** நூலில் தமிழ் மொழியை இழித்தும் பழித்தும்,

அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை அவற்றுள்
ஒன்றேயாயினும் தனித் தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று
அறையவும் நாணுவர் அறிவுடையோரே (7:25-28)

எனவும்

வடமொழி தமிழ்மொழி என இரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக (7:30,31)

எனவும் கூறியுள்ளார். இந்த ஒரு சார்புடை வடமொழிவாணரது தன்னிச்சையான கூற்று தமிழ் மொழி வரலாற்றில ஒரு பெரிய திருப்பத்தை உண்டு பண்ணிவிட்டது.

தனித்தமிழ் இயக்கம்

தமிழ்க்கடல் மறைமலைஅடிகள், தேசிகரின் கூற்றை அறிந்து வெகுண்டெழுந்தார். வேதாசலம் எனும் தமது பெயரை மறைமலை என்றும் தான் நடத்தி வந்த, **ஞானசாகரம்** எனும் இதழின் பெயரை **அறிவுக்கடல்** எனறும் மாற்றியதோடு அதுவரை தான் எழுதி வெளியிட்டிருந்த நூல்களில் உள்ள வடமொழிச் சொற்களை நீககி தமிழச் சொற்களை அமைத்துவிட்டார்.

மறைமலைஅடிகள 1916-ஆம் ஆண்டில் தொடங்கிய தனித்தமிழ் இயக்கத்தைக் கொள்கையாக ஏற்று நடைமுறைபபடுதத எண்ணினால்

அறிவியல், பொறி இயல் வளர்ச்சி குறுக்கே நிற்கிறது. எனவே, மெத்த வளரும் மேற்கத்தியக் கலையாம் அறிவியலின் சொற்களை அருநதமிழுக்குப் பெயர்க்க வேண்டும். தனித்தமிழ் இயக்கம் தொய்வின்றித் தொடர்ந்து வளர்ந்து கலைச்சொற்கள் தமிழில் பெருக வேண்டும் என்று கருதி உழைததவர் மொழிநூல் அறிஞர் தேவநேயப் பாவாணர். அவரது தலைமையில் வெளி வந்த **சொற்பிறப்பியல் அகர முதலி** 1985-ஆம் ஆண்டு முதல் பற்பலத் தொகுதிகளாக வெளி வந்திருக்கிறது நீண்டகாலத் திட்டமான பன்னிரெண்டு தொகுதிகளை நிறைவு செய்ய வேண்டிய திட்டப்பணியாகத் தொடங்கப்பெற்ற அத்துறையின் பணி இன்னும் நிறைவுறவில்லை.

பெயர்க்கப்பெறும் சொற்கள்

மறைமலையார், பாவாணர் போன்ற அறிஞர் பெருமக்களது தமிழ்ப் பேரார்வம் தலை நிமிர்ந்து செயற்படவேண்டுமாயின், பல்லாயிரக்கணக்கான அறிவியல் சொற்கள் தமிழுக்குப் பெயர்க்கப்பட வேண்டும். இந்த மொழி பெயர்ப்பு ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டிய பணியாகும். சொல்லுக்குச் சொல் பெயர்க்காமல், கருத்தறிந்து மாற்றம் செய்தலே நன்று. பாவாணர் அவர்கள் ஆக்ஸ்பர்டு ஆங்கில அகராதியினை **எருதந்துறை ஆங்கில அகராதி** எனப் பெயர்த்துள்ளார். விபுலாநந்த அடிகளார் எழுதிய **மதங்க சூளாமணி**யில் ஆங்கில நாடகப் பேராசான் ஷேக்ஸ்பியரின் பெயரை செகப்பிரியர் என்று மாற்றி எழுதியுள்ளார். இச்செயல் ஜமாபந்தி எனும் சொல்லை சமபந்தி எனத் தவறாகப் பெயர்க்கப்படுவதை ஒத்ததாகும். ஒரு சொல்லையோ ஊரின் பெயரையோ தனிப்பட்டோரின் சொந்தப் பெயரையோ இவ்வாறு பெயர்த்தல் பொருத்தம் அற்றது. அவை உலக முழுதும் ஒரே பெயரில்தான் இருக்க வேண்டும். இலலையாயின் பெயாகள் நாட்டுக்கு நாடு வேறுபடடு குழப்பம் ஏற்பட்டுவிடும்.

ஒருங்கிணைப்பு இன்றி சிற்சில அமைப்புகளும், தனியார்களும் ஒரே ஆங்கிலச் சொல்லுக்கு பற்பல பெயர்ப்புகளைச் செய்து விடுகின்றனர். பல்கலைக் கழகங்களில் ஆய்வு செய்து பட்டம பெறுவோரை டாக்டர் என அழைப்பது உண்டு. இதனைப பண்டாரகர் எனறு கூறினர். 'மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'

என்பது **தேவாரச்** சொற்றொடர். 'இராக்கதா ஈட்டி வைத்த பாவ பண்டாரம் அன்ன' என்பது **கம்பராமாயணச்** சொற்றொடர். பண்டாரம் என்றால் பொருட்குவியல் என்று பொருள்.

ஆயினும் அச்சொல் இன்றைய வழக்காற்று நிலையில் புழக்கத்துக்கே வரவில்லை. இலங்கையில் டாக்டர் பட்டம் பெறுவோரைக் கலாநிதி என்கின்றனர். அண்மைக்காலந்தொட்டு தமிழகத்தில் முனைவர் எனும் சொல் பயிலப்பெறுகிறது. ஒரு சொல்லை உறுதி செய்து அதுவே புழக்கத்துக்கு வருதல் நன்று.

சிற்சில சொற்கள் தவறாகவும் பெயர்க்கப் பெறுகின்றன. டிரான்ஸ்லிட்டரேஷன் (Transliteration) எனும் ஆங்கிலச் சொல்லை **ஒலிபெயர்ப்பு** எனல் பொருந்தாது. ஒரே சொல்லை வெவ்வேறு மொழிகளின் எழுத்துகளில் மாற்றி எழுதுகிறோம். எழுத்துதான் பெயர்கிறதேயன்றி அச்சொல்லின் ஒலி பெயரவில்லையே! **எழுத்துப் பெயர்ப்பு** என்பதே பொருத்தமானதாகும்.

இப்படி, மென்மேலும் வளர்க்கப் பெற வேண்டிய தமிழின் சொற்பெருக்கத்தையும், இலக்கணத்தையும், உச்சரிப்பினையும், ஒருங்கிணைத்து நெறிப்படுத்த வேண்டிய ஒரு அமைப்பு இன்றைய தேவை. தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆட்சிச்சொல் அகராதியினை வெளியிட்டதோடு இயல், இசை, நாடகம், வரலாறு போன்ற மனிதவளத்துறையின் வளர்சசியினைக் கருத்திற் கொண்டுள்ளதேயன்றி அறிவியல், பொறி இயல், கட்டடக்கலை, மருத்துவம் போனற துறைகளைத் தனது தமிழ் வளர்ச்சிப் பணியில் இணைக்கவில்லை.

மொழி வளர்க்கும் பிரெஞ்சு அகாதெமி

பிரான்சு நாட்டில் 1635-ஆம ஆண்டு பதின்மூன்றாம் லூயி காலத்தில் தொடங்கப் பெற்ற பிரெஞ்சு அகாதெமி இன்று வரை பிரெஞ்சு மொழியின் பன்முக வளர்ச்சியைக் கொண்டு இயங்குகினறதோடு, தேர்ந்தெடுத்த பல்துறை அறிஞர் குழுவின் ஆலோசனைகளையும் ஏற்றுச செயல்படுகிறது. பிரெஞ்சு மொழியின இலக்கண, இலக்கிய, அறிவியல் துறைகளில, எந்த மாற்றமும், திருத்தமும், இணைபபும், பெயர்பபும், சேர்ப்பும, ஏறத்தாழ நானூறு

ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் அந்த மாமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே புழக்கத்துக்கு வருகின்றன. அரசுகளும் ஆட்சிகளும் மாறினாலும் அந்த பிரெஞ்சு அகாதெமி படைப்பிலக்கியம், பெயர்ப்பு என மொழி வளர்ப்பினைத் தவறாது செய்து வருகிறது. அறிவியல், அரசியல், இலக்கியம், இலக்கணம் போன்ற பல்வேறு துறைகளிலும் கற்றுத் துறைபோகிய பேரறிஞர்களே அதில் உறுப்பினர்களாக உள்ளனர். அதனை முன் மாதிரியாகக் கொண்டு தமிழுக்கு அரசியல் கலப்பில்லாத அப்படியொரு மாமன்றம் தேவை.

இப்போதிருக்கின்ற தமிழ் வளர்ச்சிக் கழகத்தையோ, உலகத் தமிழ்ச் சங்கத்தையோ பிரெஞ்சு அகாதெமியைப் போன்று திருத்தி அமைத்தலும் பொருத்தமே. தெலுங்கு மொழி நிறுவனம் ஒன்றை ஆந்திர அரசு அமைக்க இருப்பதாகவும், அம்மொழியின் அறிவியல் மொழி வளர்ச்சியினையே அது தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது எனவும் தெரிகிறது.

புதிய சொற்களைத் தெலுங்கில் படைப்பதற்கென்றே விஜயவாடாவிலிருந்து **அம்மனூடி** எனும் மாத இதழ் வெளியாகியது. தமிழக அரசு இதனை மனதிற் கொண்டு தமிழ்ச்சொல் வளர்ச்சிக்கு ஆவன செய்தல் தமிழ் மொழிக்குச் செய்கிற அரிய பணியாக அமையும்.

சொற்களின் தோற்றம்

மொழி இயலார் சொற்களின் தோற்றத்திற்கு டிங்டாங், பூ, பூ கோட்பாடு என்பனவற்றைச் சான்று காட்டுவர். கா, கா எனக் கரைகின்ற ஒலிக்குக் காரணமாகிய பறவையினைக் காக்கா அல்லது காக்கை என்று பெயர் சூட்டினர். வெப்ப நாடுகளில் விளையும் முருங்கைக்காயைப் பார்த்த ஆங்கிலேயருக்கு அது முரசினை அடிக்கும் குச்சி போலத் தெரிந்தது எனவே, அதற்கு, 'Drum stick' என்றும், இசைப் பறவையாக நாம் கருதும் குயில் குக், குக் என்று ஒலி எழுப்புவதனால் அதற்கு, 'Cuckoo' என்றும் பெயர் வைத்துள்ளனர்.

இலககண மரபுக்கு உடபட்டு திசைச்சொல்லாகவும், திரிசொல்லாகவும் வருவனவேயன்றி, மொழிபெயர்ப்பாளர்களும் பத்திரிகையாளர்களும், தமக்குத் தோன்றியவாறு, அயன்மொழிச் சொற்களை எவ்விதப் பொருததமும் இன்றி தமிழில் எழுதி விடுகின்றனர். தேனிலவு, அய்ந்தாம்படை, முதலைக்கண்ணீர் போன்ற சொற்கள் அப்படியே ஆங்கிலத்திலிருந்து பெயர்க்கப்பெற்றவை. அவை, முறையே புதுமணத் தம்பதியரின் சுற்றுலா, எதிரிகளின் ஒற்றன, போலியான நடிபபு ஆகிய பொருளைத் தருவன. இந்தப் பொருளுக்கும், சொற்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இருப்பினும், இவை பேச்சு வழக்கிலே மட்டுமின்றி க்ரியா வெளியீடான தற்காலத்தமிழ் அகராதியிலும் (1992) குடியேறி விட்டன. அரசியல் உலகில் கட்சி மாறுவதையும்;- அதற்கு விலை பேசுவதையும் குறிப்பிடுகிற Horse Trading எனும் சொல்லை அப்படியே குதிரை பேரம் என்று பெயர்த்து அதுவும் தமிழில் ஒரு புதிய சொல்லாகி வந்து கொண்டுள்ளது. ஆங்கிலத்திற்கு இணையான சொற்பெருக்கம தமிழில் இல்லையென்றால் பிஞ்சு, காய், செங்காய் போன்ற சொற்களுக்கு இணையாகத் தனிச் சொற்கள் ஆங்கிலத்தில் இல்லை என்பது ஈண்டு நோக்கத்தக்கது,

பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் நிலவுகின்ற கருத்துப் பரிமாற்றத்துக்குத் துணை நிற்கின்ற எந்தச் சொல்லும் வழக்கில் நிலை பெற்று காலப்போக்கில அகராதியிலும் இடம் பெற்று விடுகின்றன. வளாந்து வரும் மொழிகளில் சொற்களின வளர்ச்சியும் பெருக்கமும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். இப்படிப புதுவதாகப் பிறக்கும் சொறகளைக் கட்டிக் காப்பது அகராதிகளதாம். எனவே, சாதாரணமாக பத்தாண்டு காலத்திற்கு ஒரு முறை பழையனவற்றைக் கழித்துப் புதுப்புது அகராதிகளை நோக்கு நூலாகப பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆங்கில மொழியில் 1900 - ஆம ஆண்டு தொடங்கி 2000-ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு பத்தாணடு

காலத்திலும் எந்தெந்த புதிய சொற்கள் எங்கெங்கு வெளியாகியுள்ளன என்ற விவரங்களுடன், 'A Century of New words (2007)' என்னும நூலை ஆக்ஸ்பார்டு யுனிவர்சிட்டி நிறுவனத்தினர் வெளியிட்டுள்ளனர். அந்நூலில் கொடுக்கப்பெற்றுள்ள ஏராளமான சான்றுகளில் தொண்ணூறு விழுக்காடு புதிய ஆங்கிலச் சொற்கள் மாத, வார மற்றும் நாளிதழ்களில் வெளிவந்தவை. அதாவது, ஆங்கில மொழியின் சொல் வளர்ச்சியில் செய்திப் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பது இதனால் தெளிவாகிறது.

சொற்களின் மறைவு

பல்வகையானும் ஒவ்வொரு மொழிக்கும் இப்படி வந்து சேருகின்ற சொற்களில் சிற்சில காலப்போக்கில் சமுதாயப் புழக்கத்திலிருநதும், இலக்கிய வழக்கினின்றும் அருகிப்போய் மறைந்து விடுகின்றன. இவையே வழக்கிறந்த சொற்கள் எனப்படும். தோன்றுவன மறையும் என்பதோடு பிறந்தன இறக்கும் எனும் உலகியல் நியதிக்குச் சொற்களும் விதிவிலக்கல்ல. சான்றாக, **தொல்காப்பியம்** உருபு இயலில் குறிப்பிடப் பெறும் புழன், அழன் ஆகியவற்றை வழக்கிறந்த சொற்களாகக் காட்டலாம். சங்க இலக்கியத்தில் பயின்று வரும் யாணர், முருடு, பண்ணியம், கூலம், ஈரணி, அம்பல், கந்து என வழக்கிறந்த சொற்களின் இப்பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். சமபந்தர் தேவாரம் முதல் திருமுறை 106-ஆம் பாடலில் வரும் சீவரம் எனும் சொல் மரவுரியைக் குறிக்கும் மரவுரி இல்லாத இக்காலத்தே அச்சொல் வழக்கிறந்து போனது

சொற்கள் வழக்காற்றில் புழங்கப் பெறவில்லையாயின், அவை மறைந்த சொல்லாகி விடுகின்றன. அசுணம் எனும் பறவை கடுமையான பறையொலி கேட்டால் மடிந்துவிடும் தன்மை உடையது என்றும், காலபபோககில் அந்த இனமே அழிந்துவிட்டது என்றும் அறிகிறோம். இறறைக் காலத்திலும் மின்னாற்றலில் இயங்கும் ஏராளமான

கைபேசிகளின் தாக்கத்தினால் சிட்டுக்குருவி இனமே அழிகிறது எனவே, இவ்விரு பறவைகளின பெயர்கள் உலக வழக்கினின்று ஒதுங்கி விடுகின்றன.

சங்க இலக்கியத்தில் காணப்பட்டாலும் வழக்கிறந்த சொற்களாகக் கருதத்தகும் முபபது சொற்களை வரிசைப்படுத்தி உரிய விளக்கங்களுடன் **சங்கச் செவ்வி (2010)** எனும் கையடக்க நூலை ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். சிற்சில சொற்கள் வழக்காற்றில் இருந்தாலும், அவற்றின் பொருள் மறைந்து விடுகிறது. இதற்குச் சான்றாக ஒரு கற்பனையான உரையாடலைக் குறிப்பிடலாம். **நான் அந்தப் புத்தகத்தை வாங்கினேன்** என்றால் அந்த வாக்கியத்தின் பொருளைத் தொல்காப்பியரால் கூடப் புரிந்து கொள்ள இயலாது. ஆனால் **யாம் அந்நூலைப் பெற்றோம்** என்று சொன்னால் அப்பொருள் அவருக்கு விளங்கிவிடும்.

சமூகப் பழக்க வழக்கங்களிலும் அன்றாட இல்லறப் பணிகளிலும் எந்திரங்களின் பயன்பாடு அதிகமாகி வருகிறது. எனவே நுகத்தடி, மேழி, கூண்டு வண்டி, உறி, உலக்கை, மத்து ஆகிய சொற்கள் மறைந்து வருகின்றன. இச்சொற்கள் இன்றைய இளைய தலைமுறைக்கு வழக்கிறந்த சொற்களாகிவிட்டன. பண்டைக் காலத்தில் தோளிலும் முதுகிலும் மூட்டை முடிச்சுகளை நீண்ட தூரம் தூக்கிக் கொண்டு கால்நடைப் பயணம் செய்வர். பயண அலுப்பில் பாரத்தை இறக்கி வைக்கும் இடமே சுமைதாங்கிக்கல். இப்போது அத்தகைய நடைபயணம் இல்லை. சுமைதூக்கி நடக்கும் பழக்கமும் இல்லை. எனவே, அந்தச் சொல் வழக்கிறந்து விடுகிறது. இறந்தன போக எஞ்சியவற்றோடு தேவைக்கேற்ப புதிய சொற்களை அவ்வப்போது படைத்து மொழியின் சொல் வளத்தைப் பெருக்குவது நம்மனோர் கடமையாகும.

சங்கச் செய்திகள்

மதுரை நானகாம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி, அமெரிக்க தமிழ் அறிதம் அமைப்புடன் இணைந்து 'தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் மெய்ப்பாடுகள்' என்ற பொருண்மையில் 01.06.2020 முதல் 05.06.2020 வரை ஐந்துநாள்கள் இணையவழிப் பயிலரங்கம் நடைபெற்றது. கல்லூரிச் செயலர், இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி தலைமை வகித்தார். இந்நிகழ்வில் 01.06.2020 அன்று கலைமாமணி ஆண்டாள் பிரியதர்ஷினி 'கவிதைகளில் மெய்ப்பாடுகள்' என்ற பொருண்மையிலும் , 02.06.2020 அன்று எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் 'நாவல், சிறுகதை உணர்த்தும் மெய்ப்பாடுகள்' என்ற பொருண்மையிலும், 03.06.2020 அன்று செந்தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் க.சின்னப்பா 'நன்னூல் உணர்த்தும் மெய்ப்பாடுகள்' என்ற பொருண்மையிலும், 04.06.2020 அன்று செந்தமிழ்க் கல்லூரித் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலட்சுமி 'சங்க இலக்கியத்தில் காதல் நாடகம்' என்ற பொருண்மையிலும் 05.06.2020 அன்று கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம் 'காப்பியங்கள் உணர்த்தும் மெய்ப்பாடுகள்' என்ற பொருண்மையிலும் கருத்துரை வழங்கினர். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா வரவேற்புரையும், துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி நன்றியுரையும் நல்கினர். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் ஜெ.போ.சாந்திதேவி ஆகியோர் பயிலரங்கினை ஒருங்கிணைத்தனர். பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

22.06.2020 அன்று காலை 11.00 மணியளவில் உலக யோகா தினத்தை முன்னிட்டு 'உடல் வளமும் மன நலமும்' என்ற பொருண்மையில் செந்தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் க.சின்னப்பா உடல்வளம் மற்றும் மனநலம் காப்பதில் யோகாவின் பங்களிப்பு குறித்தக் கருத்துரையை இணையவழியில் வழங்கினார். கல்லூரி நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்தனர். பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

ஆகஸ்ட் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

கவிஞரேறு வாணிதாசன்
(ஆகஸ்ட் 7)



நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை
(ஆகஸ்ட்24)

வ. சு. செங்கல்வராய பிள்ளை
(ஆகஸ்ட் 25)

தெ. பொ. மீனாட்சி சுந்தரம்
(ஆகஸ்ட் 27)



அ. ச. ஞானசம்பந்தனார்
(ஆகஸ்ட் 27)



தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
(ஆகஸ்ட்.31)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**
முனைவர் **இ.மறைமலை**
முனைவர் **செ.கந்தசாமி**
முனைவர் **பெ.சுயம்பு**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**
முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **உல.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1